ஓம்:

# அருள்மொழி

SITHY VINAYAGAR
BF/29.
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

இஃது
ஆனந்தாச்சிரமத்தைச் சேர்ந்த
இராமதாஸ் அவர்கள் இயற்றிய
ஆங்கிலப் பாடல்களின் சாரம்

தமிழாக்கம்: தம்பு இராஜேஸ்வரி

சுன்னாகம்
திருமகள் அழுத்தகம்
சர்வசித்து மாசி

# சாற்றுகவிகள்

## I

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருமருவு மானவந்தாச் சிரமத்தைச் சேரிராம
தாசமுனி யாங்கிலத்திற் செய்து வைத்த
கருமருவு பிணிநீக்கு மொருபிரமக் கருப்பொருளுள்
ளுறையாகக் கொண்டுமொழி கனிவார் செய்யுள்
தருமருவு தமிழ்மொழியிற் பெயர்த்ததர்ப் படயாத்தல்
தக்கதென வருட்குரவன் கருத்துட் கொண்டே
உருமருவு மாசிரியப் பாவதனி லழகுபெறப்
பெயர்த்ததனை யுரைத்தனளிங் காரோ வென்னில்,

கதிவளஞ்சேர் வண்ணை தனிற் கருதுமருத் துவனுகக்
கடனுற்றித் திகழ்சதுரன் தம்பு தந்த
மதிவளனுங் குணநலனும் வாய்ந்தவரும் புதல்விதமிழ்க்
கலையு ணர்ந்தாங் கிலமும் வல்லாள்
துதிவளருஞ் செயல்கள்புரி தூயமனம் படைத்தநல்லாள்
துரை ராம நாத வள்ளல்
பதிவளருங் கழகமதி லாசிரியை பண்டிதைரா
ஜேஸ்வரி பார்தனிலே வாழி யூழி.

—**வித்வான் க. கி. நடராஜன்** B. O. L.

# II

## 1

மோனந், தகுநிட்டை, முற்ற முயல்கின்ற
ஆனந்த ஆச்சிரமத் தண்ண லிராமதாஸ்
ஆங்கிலத்திற் சொன்ன அருள்மொழிதந் தாள்தமிழில்
ஓங்குபுகழ் ராஜேஸ் வரி.

## 2

ஆங்கிலமுஞ் செந்தமிழும் ஆராய்ந் தினிதுகற்ற
பாங்கமையும் பண்பாட் டுளச்செறுவின்—ஓங்கிவளர்
வேதாந்தச் செஞ்சாலி மீதுவிளை சித்தாந்தம்
தீதோவத் தந்தாள் சிறந்து.

## 3

சொல்லழகும் சொல்லின் பொருளழகும் அப்பொருளின்
உள்ளளகும் உள்ளம் சுவைக்கவே—சொல்லரிய
மெய்ஞ்ஞான தீபம் மிளிரநனி ஏற்றினுள்
அஞ்ஞானம் ஓட அறிந்து

—அரியாலை, பண்டிதர் சி. இராசையா

## III

மலர்தலை யுலகின் மாதவப் பயனென
நிலவுறும் ஆனந் தாச்சிர மம்வாழ்
அருந்தவர் ராமதாஸ் ஆங்கிலத் தியற்றிய
திருந்துபல் பொருளுடைத் தெய்வநூ லதனைத்
தமிழினிற் தருகெனத் தயாபரன் எம்மிறை
பவனிறை மும்மலம் பிறவியொடு வேரறுத்
தவனியி லெமையாள் குருபரன் அருளிடச்
சிவகதி தருமவன் சேவடிப் போதுதன்
தலைமிசைப் புனையுந் தவமுடைத் தனிமகள்
அலரிடைப் பிறவாத் திருமகள் அனையாள்
யாழ்நகர்ப் பிறந்த இராஜேஸ் வரியினள்
பன்மொழிப் புலமையள் பாவலர் அவையிடைச்
சொன்மழை பொழிதரும் செல்வியள் அந்நூல்
வண்தமிழ்க் கிளவியில் வகுத்தனள் அவளே
தண்தமிழ் வளரமெய்த் தனிமதம் சிறப்பவெம்
பெண்குலம் உயர்வுறப் பெரும்பணி யாற்றிஇந்
நன்னூ லொத்த பன்னூல் யாத்து
நீடுழி வாழ்கென இறைஞ்சுதும் நிமலனை.

—தெல்லிப்பளை, ஸ்ரீமதி. கனகநாயகம்

# முகவுரை

1

ஓங்குமா வந்தாச் சிரமம்வாழ் ராமதாஸ்
தாங்குபுக ழாங்கிலத்தில் தான்செய் நூல் — ஈங்குநீ
செந்தமிழி லாக்கவெனச் சீர்க்குரவன் செய்பணியை
என் தலைமே லேற்ற னியைந்து.

2

உய்த்துணர்ந்து நல்லா ருணர்பொருள்சேர் நூலிதனை
எத்தகைய வாக்கா லியம்பவென — நித்தம்
குரவனருள் வாக்கில் குலவியெனை யாளும்
பரமனருள் போற்றிப் பணிந்து.

3

இந்நூல்யான் செய்கா லியைந்த திருவருளால்
பன்னூலும் வல்லார் பலரிதுவே — நன்னூலாத்
தோற்றத் துணை தந்தார் தூயோர் தனிமாண்பு
போற்ற வுரியன் புகழ்ந்து.

4

மூந்நூற் பொருட்சீரால் மூந்நீ ருலகிலிது
நன்னூலே யாகி நலந்திகழ — விந்நூலைப்
பொன்று மொழியால் புனைந்தார்க் குரித்தாமென்
குன்றாத நன்றி குறித்து.

5

என்செயலால் யாத்தளித்த நூலன்று ஈதிறைவன்
தன்செயலால் தண்மொழியி லாகியதே — என்செயலால்
புன்சொற் பிழையுளவென் றெண்ணிற் பொறுத்தருளல்
நன்சொற் புலவோர் நலம்.

தம்பு இராஜேஸ்வரி

ஓம்

# அருள்மொழி

## பிரார்த்தனை

மலர்தலை உலகெலாம் புரக்கும் முதல்வ!
மருவிய விண்ணும் மண்ணும் படைத்தோய்!
படைத்தவைகாப்போய்! துடைப்போய்! தமியனுன்
அடியிணை மலர்க்கே அபயம் புகுந்தனென்
னுடல்பொரு ளாவி யுனக்கே, தந்த,னுன்
செந்தா மரைத்தாள் சிந்தையிற் பூத்திட
எந்தாய் அருள்வாய் ஏத்தினன் தாழ்ந்தே.
கருணையங் கடலே! குருபர! கடையேற்
கருளுதி அழியா ஆற்றலும், அமைதியும்
ஒளிவளர் பளிங்கினை ஒக்குந் தூய்மையும்;
எல்லா ரகத்திலும் உள்ளாய்! தூயாய்!
நல்லாய்! நன்மையின் புணர்ப்பே நின்மல!
அன்புரு வாகிய அருட்பெருங் குன்றே!
ஆழ்ந்த மோனச் சாந்த வடிவே!
பரமா னந்தக் கடலே! பரனே!
பணியும் அடியார்க் கினியாய்! பெரும!
மெலிந்தோர் புகலே! நலிந்தோர் துணையே!
அடைக்கல மென்றோர்க் கபயம் அளிப்போய்!
புன்னெறிச்செலுமெனை நன்னெறிப்படுத்தியென்
வாழ்வும் பணியுமுன் வார்கழ லிணைக்கே
அர்ப்பண மாக்கும் அறிவுகை கூட்டுதி;

நின்னருள் துணையால் என்னுளத் தென்றும்
மன்னிப் பொலிக மகிழ்வும் சாந்தமும்.
நாய னேனை நயந்தாட் கொண்ட
தூயசற் குருவும், தாயு,மிவ் வையகத்
தேனைய உறவும் நீயே, எனையுன்
காதன் மதலையாய்க் கொள்ளுதி கருணையால்;
ஆரா வன்பொடுன் அடிமலர்த் தொழுது
நீரா யுருகும் நெஞ்செனக் கருள்க! யான்
எப்பணி செயினு மப்பணி யெலாமுன்
அடியிணைக் கேற்குக; ஆக்குமென் வினையினில்,
வாக்கினில் மனதினில் வாய்மை வளர்க, இக்
கள்ளச் சிந்தையை மெள்ளப் பிணித்து
நின்தாள் சேர்த்தனன்; நிமல! இந் நெஞ்சில்
நின்னருள் நினைவே நிரப்புக; உந்தன்
திருவளர் கருணைத் திகழொளி ஏற்றுக;
எப்பொருள், எத்திசை, எவ்வயி னேக்கினும்
அப்பொரு ளனைத்துமுன் னருள்வடி வெனவுணர்
மெய்ப்பொருட் காட்சி மயக்கறத் தருக, நீ
பிரியா தெம்மோ டுடனும் தத்துவம்
புலங்கொள உணர்த்துக. நலங்கொளப் பாரிலென்
மருள்நிறை வாழ்வுன் அருள்நெறிச் செலுத்துக;
ஆணையி னிறுத்துக; அடிநிழற் றுங்குக.
தண்ணருள் வெள்ளத் தனிமா முகிலே!
தாழ்ந்தனன்; பணிந்தனன்; தமியேன் இரந்தவிவ்
வேண்டுகோ ளனைத்தும் ஈண்டெனக் கருளுதி.
என்று மெனையுன் அடிமையாக் கொள்க.
நின்னதே நாயேன்; நின்னதே; இறைவ, வுன்
பொன்னடி வாழ்க! புவிமிசைப் பொலிந்தே.

## 2. விழித்தெழு

நீனிற வானை நிமிர்ந்து நோக்குதி;
பானிறக் கதிரோன் பையக் கரந்தனன்;
பைம்பொற் றிங்கள் தண்ணில வுகுத்தது;
வண்ணத் தாரகை கண்ணிதழ் சிமிழ்த்தது;
வெண்ணகை புரிந்தன விண்மிசை; அதன்கீழ்
நிலமெனும் மெல்லியல் நர்த்தனம் புரிகுநள்;
ஆடுநள்; அசைகுநள்; பாடுநள். பாராய்;
காலச் சிறுகோல் கரத்தினி லேந்தி
பற்பல வர்ண அற்புதக் காட்சி
ஆக்குநள் கணத்தில்; அழிக்குநள் பெயர்த்தும்;
புதுக்குகள்; தீட்டுநள், புத்தழ கூட்டுநள்;
இயற்கை அன்னையின் செயற்றிறன் கண்டும்
மைந்த! மானுட! எந்தன் புதல்வ!
சிந்தை தளர்ந்து செய்வகை இழந்து
நொந்தொரு புறத்து நுடங்கித் துயில்தியோ?
நித்திய னன்றோ? நீதுய ருறுதலென்?
புத்தமிழ் தளாவி மெத்தெனப் பாயும்
இன்னிசை போன்ற இயல்பொடு பொலிந்து,
மன்னும் வாழ்விதன் மாண்தகு முற்றில்,
நீயே ஆக்கிய நிகரிலா வின்னல்,
வீண்துய ரென்னும் விடமது சேர்த்திவ்
வமர வாழ்வைக் குமர,கொல் லுதியோ;
விண்ணிலை திரியினும் தண்கடல் பெயரினும்
தன்னியல் திரியாத் தனிச்சுதந் தரமுனக்
கன்னை யாக்கினள்; மன்ன னுகுதி;
விரைந்தெழு மைந்த! விழித்தெழு, புதல்வ!
நிரந்தர வின்பொடு சுதந்தர இளைஞனாய்
ஊழிதொ றூழி வாழிநீ பெரிதே.

## 3. கனி

வெளிப்படக் கனியும் விளைந்தது காணாய்;
அரிதின் வளர்ந்து அகனிலம் பிளந்து
நல்லிலை விரித்து நானிலத் திலங்கி
எழில்மல ரலர்த்தி இன்மணம் பரப்பி
இசையொடு நிறைவா மிறுதிக் கனியினை
ஈன்றது போல, விங்குநல் லான்மா
வளர்வுறு வாழ்வின் பெருந்துயர் கிழித்து,
மன்பதை மயக்கக் குறுமதில் அழித்து,
எல்லையில் இன்ப தெரிசனம் மேவும்;
நிலைபெறு தெய்வ அன்பொளி சேர,
நிறைந்தநல் முடிவு நித்திய இன்பே.

## 4. இலை

அசையுமென் காற்றுக் காற்றிலா நடுங்கி,
மிசையுயர் தருவில் நொய்தா மிழையால்
இயைவுறு மிலையை எழுந்தொரு காற்று,
தாயென் தருவில் தவிர்ப்ப, தரண்மிசை
ஓய்வும் அமைதியு முளதோர் துயிலினி
லாழ்ந்தது போலு, மாக்கையுள் ஆவி
ஈங்கதற் காயசிற் றுடல் கழியவும்
எல்லையில் உண்மைக் கேகிடும் தானே.

## 5. வாழ்க்கை ஆறு

தொன்மைசால் ஊற்றில் தொடங்குநல் லாறு,
மலையிலும், சரிவிலும், மணலிலு மேவி,
உயர்ந்துபின் தாழ்ந்து, ஓசையொ டாடி,
ஆரவா ரித்தும், அமைதியொ டிழிந்தும்,

தவிக்கும் பயிர்களைத் தண்ணீர் அருத்தியும்,
புவிக்குள் வளமுள புலமதை அழித்தும்
இறுதியில் ஒப்பில் ஓய்வும், அமைதியும்
ஆழமார் கடலின் துறைபோய்ப் பெறுமே.

## 6. வீரம்

வெற்றியிங் குனதே! வீறுகொள் வாய்நீ!
உற்றநல் லிறைவன் உன்துணை, நேயன்.
தன்கரம் கொண்டுனைத் தாங்கிய வள்ளல்;
அன்னவன் தண்ணருள் நின்கண் ஒளிர்தர,
அவனுன் னாதரம்; அதனை நீ நம்பு.
அவனுனைக் காப்பன்; அச்சமேன்? அயர்வேன்?
வெற்றியிங் குனது! வீறுகொள் வாயே!

## 7. ஒளிக்கதிர்

கூரிருட் கரந்து குலவிடு மின்னொளி,
சேரிருள் நீத்து செவ்வொளி காட்டுமிக்
கவினொளி தெய்வத் தன்மையும் சான்றது;
ஆதரம், துணிவு, அனைத்துமிவ் வொளியே!
செல்நெறி காட்டும், சிந்தையில் தெய்வம்;
ஒளியிவண் போதர, இருள்மிக இரியும்,
நம்புதல் பிறக்கும்; நலிதலும் ஒழியும்;
பலமது கிடைக்கும்; சோர்வெலா மறையும்;
ஆண்மை அணுகிடும்; அச்சமு மழியும்;
இன்பமே ஓங்கும்; துன்பெலா மோடும்;
அமைதி நிலைபெறும், ஆணவம் அழியும்;
செறியிருள் மாட்டே செவ்விய நல்லொளி
காக்குமவ் வொளிகரந் துறைதலும் காணே.

## 8. பேருண்மை

ஆன்மா வதனின் அளவில்மோ னத்தில்
சூன்ய மனைத்தும், சொல்லப் புகினதை
மனமெனு மொன்றின் வகையுறு மாழத்திற்
கப்பாற் பட்டது; எப்போது முள்ளது;
செப்பிடிற் சாந்தியே, சீருறும் அமைதியே;
உயர்ந்தவை அனைத்தினு முயர்ந்ததே, இனிய
செயர்தீர் அன்பே யாக,த் தினமுமவ்
வுயர்தரி சனத்தின்முன் உள்ளதெஞ் ஞான்றும்;
நுனித்தறி யொணுவந் நூதன வுலகில்
நுழையத் தானும் நுண்மை அற்றது;
பின்னம் மனமெது? அன்புதான் எதுவோ?
என்றிடிற் கழறுதும்; இருளினி லியங்கல்
கன்றுமம் மனமாம்; கவின்பெறு மொளியில்
உலவுதல் தானே உயரிய அன்பாம்;
அப்பெரு முண்மை அவ்விரண் டனுக்கும்
அப்பா லாகி அனைத்து நினைவையும்,
நாமமே, ரூபமே, நவிலுறு மசைவே,
சேமமார் காலமே, செயல்பெறு மிடமே,
ஏதுவே, எனுமிவை எவற்றையுங் கடந்தது;
ஓதின் அதுவே கோதில்பே ருண்மை
முழுப்பெரு நித்தியம்; வழுத்தகு மியல்பது;
விழுத்தகு மெவற்றினும் மேலா யுள்ளது;
நிறங்குறி அற்று நினைவையுங் கடந்த
திறமுடைத் தாம்,அச் சீரிய உண்மையே!

## 9. மூலப்பொருள்

முடிவில் மூலப் பொருளதி னின்று
முன்னிடு வாழ்வின் முற்பொரு ளினிது;
எல்லையில் இன்பது; மன்பதை உயிரெலாம்
எல்லையில் இன்பம் விளக்கிடு தோற்றம்;
மூலம் அறியா வாழ்விளி தன்று;
மூலப் பொருளோ விடுதலை யுடையது,
தெய்விக இன்பம், என்பதைத் தேறின்,
தூயநல் லின்பம் துலங்கும் ஆறெனு
மன்பதை தன்னில் இணங்கிய வாழ்வு
ஒற்றுமை, அமைதியொ டொருங்கினி தோடும்;
நுண்ணிய தெய்வ சக்தி யுணர்வொடு
வாழ்க்கை இனிதே நடைபெறல் கண்டீர்;
தடைசிறி தின்றிமுன் னேறிச் செல்லும்;
வெற்றியும் தோல்வியும் பெற்றினி தூர்ந்தும்,
அன்பும், அணியும், அமைமண மலர்களை,
ஆக்கியும், அழித்தும், அழகுறச் செல்லும்;
தான்பே ரின்பாய், நல்குவ தமைதியாய்
முற்பொரு ளறியும் முன்னிய வாழ்வே.

## 10. சர்வ வியாபகன் யான்

எங்கு முளேன்யான்; உருவெலாம் எனதே;
தங்குவன் குன்றில்; மலையினில், தரையில்;
வளம்பெறு செடியில் மரமதில் வளர்வன்;
புழுவில், கிருமியில், புவியினில் ஊர்வன்;
காற்றிற் பறவையாய்க் கடிதிற் பறப்பன்;
ஆற்றெணுக் காட்டில் விலங்கெென அலைவன்;
ஆணினில், பெண்ணில், அன்புசால், சிசுவில்,

பேணிநின் ருங்கு பெருந்தொழி லாற்றுவன் ;
மதியில்,விண் மீனில், கனலியில் மிளிர்வன் ;
நதியின் பெருக்கில் நன்கினி தோடுவன் ;
ஆழியின் அலையில், அமிழ்ந்தெழுந் திறுவன் ;
மின்னலுள் மிளிர்வன், நெருப்பினுள் ஒளிர்வன்;
மோனநல் வெளியில், நிறைந்தினி தமைவன் ;
மெல்லென் ஒளியில், மிளிர்ந்தினி துறைவன் ;
கல்லென் இருளில், கண்ணுறங் கிடுவன் ;
இப்புவிப் பொருளெலா மியக்கிடு முயிர்யான் ;
எப்பொரு ளுள்ளும் இலங்கிடு முண்மையான் ;
என்னலால் வேறிலை ; இறைவன் யானே !

## 11. தெய்விகக் குழந்தை

கால நேரத்தின் கணக்கில் துடிப்பில்,
ஏயபல் தோற்ற, எண்ணக் கலப்பில்
மோக அலையில், மூளும் சமரில்,
அசையு முலகின் அளப்பரு விரைவில்,
பிறவி மரணப் பேரிடர்க் கனவில்
என்றும் மாறு வியல்பின தொன்று,
குன்று திலங்கு பெரும்பொரு ளுண்டு;
மோனம், அமைதி முற்றுமிங் குலவும் ;
மதியும், கதிர்,விண் மீனு, முலகும்,
துதிபெறு மொளியுள் தோன்றி மறையும் ;
பெயரும், உருவும், அசைவும், அதன்கண் ;
எல்லையில் ஒய்வும், அமைதியும் ஈங்கு ;
தெய்வநல் லமைதி திகழிதன் மாட்டே
தெய்விக அன்னைத் திகழுரு தோன்றும் ;
அன்னவள் மேலும் அளவில் பீடுடைத்

துன்னரு மழகுத் தெய்வக் குழவி,
தூயவள் கருவில், தோன்றி மலர்ந்தது;
ஒவ்வோ ருயிர்ப்பில் உலகம் படைப்பன்;
அளவில் புவனம் ஆக்கினன் கண்டாய்;
வெளிநில மெல்லாம் விளங்கின வுயிர்கள்,
நிரந்தர வின்பம், நித்தியா னந்தம்,
அன்பே உருவா யாகிய தனயன்;
அவன்கண் ஒளிரும் அற்புத பிரபை;
தங்குவர் அங்கு தாயும் சேயும்;
இடையிடை ஒளியுள் இனிதின் மறைவர்;
சொல்லொணுக் காதல் சோர்விலா ளன்னை
தண்ணிய கருணை தாங்கினள், காப்ப,
வளர்சிசு, நகைத்து, விளையா டும்மே.

## 12. என்னிதய தேவன்

தூயநற் கோவில், திகழுமென் உள்ளம்;
ஏயஅக் கோவிலுள், எல்லையில் சக்தியின்
பீடமொன் றினிது பொருந்திய ததன்மேல்
புன்னகை பூத்த பொலிவத னோடு
அன்புசால் தெய்வக் குழவி யிவர்ந்தது;
தன்தண் அளியால், அவன்கண் ஒளிரும்;
இன்னிசை அவன்செவ் விதழிற் பொருந்தும்;
இன்பம் உணர்வை இனிதா யெழுப்பும்;
கைகளை உயர்த்திக் களிநடம் புரிவன்;
இன்,பொளி அழகு, அன்பினை அளவி
தெய்விக நிறைவாம் ஒருபிழம் பாக்கி,
வளைந்து, வளைந்து, வனப்புற, ஆடுவன்;
ஒருகால் இமைப்பில், ஒளிபுறம் போதர,

உலக மனைத்தும் ஒருங்கு மலர்ந்தது;
பின்னே ரிமைப்பிற் பேரொளி யுட்புக
அனைத்து உலகும் அழிவது காணே.

## 13. அன்பின் குழவி

என்றுமென் அன்னையாய் நீயிவண் விளங்க,
உன்றன் தெய்வக் குழவியான் ஆக,
இறைவா, உன்னே டிருக்கயான் வேட்பன்;
அண்மையில், உன்னே டிருக்குநல் லின்பம்,
அன்பால் வேண்டியுன் அருள்யான் பெற்றனன்;
உன்னுடை அன்பாம் இன்பவூற் றதனில்,
என்னுடைத் தாகம் யானினி தாற்றினன்;
நெருங்கிய நேயம் நின்னொடு நேர்ந்து,
நிகரில் இன்ப உணர்வுயான் பெற்றனன்;
அன்புள் திளைத்தனன்; அதனுள் ஆழ்ந்தனன்;
அற்புத மணிபோல், நின்பே ரன்பு,
தூய்மையு மொளியும், திசைதொறும் பரவ,
அன்னதுள் ஆழ்ந்து, ஆடித் திளைத்தனன்;
என்னிது! இப்போ செய்தனை? இறைவா,
அன்பனைத் தன்னுயிர் நேயனிற் பிரிக்கும்
இன்புய ரன்புத் திரைஎடுத் தனைநீ;
அன்பென் விளையாட் டினிமுடித் ததுகாண்;
ஐக்கியப் படுங்கால் அடையுமின் பழிந்தது;
சுவையில தாய வெறுமையொன் றுண்டு;
தாயின் கருவுள் ஏகும் சிசுப்போல்
உன்னுள் ஒடுங்கினன், இறைவா, யானும்;
இனியும் பிறவி எனக்கருள், இறைவா,
மாட்சியும், ஒளியும், இன்பமும் ஏயும்

பிறவி யருள்க, பெரியோய், உன்றன்
தூய, இனிய மாசில் சேயாய்
என்று முன்பால் எனைநீ கொண்டுன்
அன்பெனும் அமுதை அருத்துக வெனக்கு,யா
னென்று முனதாய், நீயும் எனதாய்
முடிவிலா திருபோல் இருக்கவேண் டுவனே.

## 14. இன்பம்

இன்பம் தனையான் பாடுவன்; இன்பம்
என்வாழ் வாதலின், இன்பமென் பொருளாம்;
இன்பக் கதிரே, என்னினை வனைத்தும்;
இன்பநல் முத்து, என்வாய்ச் சொல்லும்;
இன்ப அலையே, என்செயல் யாவும்;
இன்பமெ னிதயத் துணர்வை யெழுப்பும்
ஆழ்ந்த பேரின்பெ னுடலுயிர் யாவும்;
இன்பக் கதிரொளி கண்ணிணை காணும்;
இன்ப விசையொலி என்செவி மயக்கும்;
இன்ப மணமென் னிதயம் நிறைக்கும்;
வாழ்வது இன்ப ஊற்றெனப் பெருகும்;
எப்பொருள் தோறும் இலங்குவ னிறைவன்
இன்பம் பெரியனென் உள்ளத் திறைவன்
இன்பமே உண்மை; இன்பமே வாய்மை;
உலகெலா மின்ப மயமதே யன்றோ?
உருவெலா மின்பத் தோற்றமு மன்றோ?
மேலும் கீழும் எங்குநல் லின்பே!
இன்பம், இன்பம், அஃதலா விலையே!

## 15. இறை தரிசனம்

உள்ளம் அன்பென் இசையை ஒலிப்ப
இன்ப உணர்வா லிதயம் துடிப்ப
ஒளியின் தரிசனே கண்ணிணே பேச,
புன்னகை பூத்துப் பொலிவுற இதழ்கள்,
இன்னொளி வதன மீதி லிலங்க,
பிரபை தலேயைச் சுற்றி ஒளிர்தல்,
இறையைக் கண்டார்க் கறிகுறி யாமே.

## 16. அன்பின் வழி அதிசயமானது

அன்பின் வழிகாண் அதிசய மானது!
சிறியதுள் எல்லாம் சிறியது மிதுவே.
பெரியதுள் எல்லாம் பெரியது மிதுவே.
எளிமையும், பெருமையும், ஒருங்குடைத் திதுவே.
அசைவுறு காற்றில், இசைகுழல் இதுவே.
அசைவுறு மலேபோல், அமைந்தது இதுவே.
மலரின் மென்மையும், வச்சிரக் கடினமும்,
வாய்ந்து, மகிழ்வு நிறைந்தது மிதுவே.
துன்புள் கலங்கித் துயருறு மிதுவே.
மென்மையு, மின்பமு, மிளிர்வது வாகி,
பிறந்தநற் சிசுவின் பெற்றிய திதுவே.
எரிமலே போல்மிகக் கொடியது மிதுவே
அன்பு நிறைந்தது; அச்சம் தருவது;
அனேத்தும் வேண்டும்; எனேத்தும் வேண்டில;
தாக்குவ திதுவே; அழிப்பது மிதுவே,
அன்பின் வழியெலாம் அதிசயம் காணே!

## 17. செபமாலையிலிருந்து.........

துலங்கிடும் எண்ண அருவியுள் துளைந்து,
இலங்கிடும் ஞான மணியினை எடுநீ;
நீல வானின் நீண்டநல் வெளியில்,
கோல ஒளிவிண் மீனைநீ தேடு.

*    *    *    *

செறியிருட் போது; சினந்தது புயலும்;
உறுமிடி யுரப்ப, மின்னல் மிளிர்ந்தது;
எங்கணும் பயமும், குழப்பமும் எய்ந்தது;
பொழுது விடிந்தது; புல்லிருள மாய்ந்தது;
புயலும் ஒழிந்தது; பேரிடி ஓய்ந்தது;
அமைதியும் ஓய்வும் அமைந்ததெங் கணுமே.

## 18. காட்சி யாது?

தாழ்ந்துசெய் பணியில் தரணியிற் பெருகும்
ஆழ்ந்த அன்பும், அமைதியும் காட்சி;
ஆசை, நய,மெனு மழுக்கில் லாதது;
தானே தோன்றும் தன்மைய, திதுவோ,
தன்னல் மில்லது; உண்மையும் ஆயது;
தூய்மை, இன்பம், துலங்கெழில் திகழ்வது;
தெய்விக ஒளியே தெரிசன மாகும்;
அகில வுலகும், அப்பால் யாவும்,
புகுந்தமை சக்தியுள் கலந்தினி தொளிரும்
ஆத்மிக ஒளியே அரியதொர் காட்சி;
எல்லோர் பாலும் கொள்ளுய ரன்பு,
எல்லார் தமக்கும் இயற்றிடு நற்பணி,
ஏகப் பொருளை எங்கணும் காணல்,
அழியா வின்பம், அமைதி யென்னும்
அமுதினை அருந்தல் அரியநற் காட்சி.

இறுதியில் பொருளோ டுறைதலும்; ஆங்கே
உறுமொரு உண்மையென் கதிரினை நோக்கல்
நித்தியப் பொருளோ டொத்தியல் வாழ்வு,
எவ்வெப் பொருளிலு முட்பொருள் காணல்
தானே இறையாம் தன்மைய தாகல்,
இறைவன் காட்சி இவையா கும்மே.

## 19. மறை பொருள்

குன்றிற் பரந்தது குலவொளிப் படலம்;
எல்லையில் அமைதியென் எழில்சேர் உணர்வு
காற்றுட் கலந்து நிறைந்தது கண்டாய்;
ஆற்றிடு காற்றில் அணிகொள் மரகத
இலைகள் அசைந்து இலங்குதல் காண்பாய்;
தெளிவில் இசையைத் திகழ்நீல் வானம்
திரும்ப ஒலித்துத் திகழ்ந்திடும் தானே;
அணிசேர் அகனிலம் அகத்துள் மறைந்த
பல்வகைத் திரவியம் படைடக் காட்டும்;
எல்லையில் இடப்பரப் பெங்கணு முளதும்,
இல்லதும் தன்பால் இறுகவே பற்றும்;
எண்ணம், உரைக்கு, எட்டுத லில்லாக்
காட்சியே உன்னைக் கலந்திடும் கண்டாய்;
வாக்கினுக் கெட்டா வாய்ந்த அமைதியில்,
தெய்விக இன்பில், திளைத்து மறைந்தனை.
இத்திசை ஏகி, இனிவிரை வினிலே,
அனைத்தும் நீயே, அனைத்துப் பொருளிலும்
யாவும் நீயே, ஆமிதை யறிவாய்;
உயர்ந்தவை அனைத்தினு முயர்ந்தது மிதுவே!
ஆழப் பொருள்களுள் ஆழ்ந்தது மிதுவே!
மேற்படு பொருள்கள், உளபொரு ளனைத்தின்

வேரும், விதையும், ஆதியும், மூலமும்,
அதுவே யாகு மியல்பினை அறிநீ!
அறிந்திட வொண்ணு அருமறைப் பொருளினை
வாழ்த்துதும் வாழ்த்துதும் வாழ்த்துதும் யாமே.

## 20. தாழ்த்தாதே

காணும் பொருட்கள், கட்புலற் கெட்டாப்
பேணும் பொருள்களின் பெரிதா மெல்லையின்,
எண்ணம், சிந்தனை, எனுமிவற் றெல்லையின்
மேலே, செலுத்துன் மேம்படு காட்சியை;
முடிவில் வாழ்வாம் கடலுள் புகுந்து
முடிவில் இன்பில் திளைத்திடு வாய்நீ;
உண்மை தழுவற் குனை எதிர் நோக்கும்;
அன்புடைப் பெரியனை அணுகநீ செல்க;
மாற்றம், சிதைவு, அழிவொடு, மயங்கு,மித்
தோற்ற வுலகினில் தாமதம் வேண்டாம்;
நித்திய வின்பெனும் ராச்சிய மேகுதி;
உன்னுடை யழிவில் கரத்தினை நீட்டி,
உலகையும், உரையினுக் கெட்டாப் பொருளையும்,
களிப்பொடு மிறுகப் பற்றியே நில்நீ
நித்தியப் பொருளின் நிலைபெறும் ஒளியில்.
உன்னை ஒளித்திடு; ஒளித்திடு; உண்மை
உனையெதிர் நோக்கும் தாமத மேனோ?

## 21. அன்பு

உள்ளத் திலங்குயர் சக்தியென் அன்பு
தன்னல மில்தனிப் பணியுட் புலனும்,
பூவில் நறுமணம் பொலிவுறல் போல,

கதிரவன் பால்ஒளி குலவுதல் போல,
தற்புல னுக்கித் தான்வாழ்த் தும்மே:
அன்புசெய் தியாகம் அளப்பரி தாகும்;
மேன்மை இயல்பொடு யாவும் பொறுத்திடும்;
எல்லோர் தமையும் இன்னிதி னருத்தி,
வேற்றுமை அறியா விழுமிய ஆறென,
அன்பு,தன் சுடரொளி அனைத்திலும் சிந்தி
நானு விதப்பொருள் நனிமேம் படுத்தும்;
கடவுளர்க் கமுதம் ஆகுமிவ் வன்பு;
அன்பே வாழ்வு; அன்பதே வாய்மை;
கடவுளர் தெய்வ,மிக் கருதரு மன்பே.

## 22. கோயில்

தூய்மையொ டமைதி துலங்குமுன் னுளமேல்,
ஏயஅவ வுளமிறை இனிதுறை கோயில்;
காமத் தூசைக் கடிந்ததொ ருளமேல்,
ஏமவா லயமிறைக் கதுவே யாகும்.
நின்வாய் மிழற்றும் நேய மொழியே
இறைவ னுவக்கும் இன்துதி யாகும்;
அறிவுக் கண்ணால் அனைத்துநீ காணின்,
இறைவன் தரிசனை அதுவே யாகும்;
எளியவர்க் காயுன் இணைக்கரம் பணிசெயின்
வழிபா டிறைவர்க் கன்னதே யாகும்;
உள்ளக் கோயிலுள் தேடுய ரன்பனை;
வாழ்த்திடு விழுமிய எண்ண மதனில்,
எழுச்சியொ டின்பம், இதம்,தரு கூற்றில்,
தன்னலம் பேணுச் சேவையில், உன்றன்
காதல் தலைவனைக் கருதிநீ காணே.

## 23. ஆத்ம சக்தியின் போதனை

புதுப்படைப் பொன்றை பிரசவ நோவில்
அவதிப் படுமிவ் வகிலம் கண்டாய்;
வெற்றுரு வங்கள் வீண்வழக் கங்கள்,
முற்றும் அழிந்த மந்திர மிவையே.
புரட்சி நெருப்பில் புக்கெரி வனவாம்.
ஒழித்திட இவற்றை உலவிடும் சக்தி;
ஒற்றுமை, சாந்தி, உற்றுய ருலகை,
ஒன்றும் நித்திய ஆதர மதனை,
அனைத்துயி ரதனின் ஆதி யதனை,
அறிந்து ஒன்றிடும் அரும்பெரு மக்களை
ஆக்கவும் சக்தி அசைவுறும் கண்டாய்.
சக்தியின் போதனை "சகலரும் என்னில்
ஆகுவ ரோருயிர்; அதைப்பகுக காதே;
புத்துணர் வோடு பிறந்தனன் யானே!
மாறிய காட்சியை மறுக்கா தேற்பாய்.
உண்மையாய், எங்கும் நிறைந்திருப் பாயே."

## 24. இறைவன் நிறைவு

உலகமிங் கெனக்கிலை; இறைவனென் உலகதன்
பலவகைப் பகுதி அனைத்தும் தெய்விகம்;
அவனும் யானும் அல்லால் வேறிலை;
அவனே யனைத்தும் எனில்யான் எங்கே?
யான், நீ, அவனும் அவனில் ஒன்றே;
ஓருயிர், ஓரெண், ஓருரு வனைத்தும்;
சூரிய னொன்றெனில், சுடரொளி ஒன்று;
பேரொலி ஒன்றேல் பிறிததன் தூரப்பு;
மோனப் பெருவெளி முற்றுமிங் கமைதி;
நித்திய விசைக்கு நிர்த்தனம் காற்று;

மெச்சிடு புகழ்,பலம் மேன்மை யனைத்திலும்
உண்மையின் உயர்வு, உயரிறை நிறைவு,
என்பவை தாமே புலனும் ஒருங்கே.

## 25. இறைமயம் நீயே

உண்மை ஒளியிலுன் உயிரைநீ ராட்டு;
இன்பமென் மலரால் இயையப் புனையதை;
அன்பெனு மின்மணக் கலவையைப் பூசு;
தியாகப் பணியால் தினமும் வணங்கு;
ஏயவுன் வாழ்வை இறைமய மாக்கில்—
இறைவன் தெரிசனம் விழியுள் இலங்கும்;
நிறைவுறு மின்ப பரவச முனக்கு;
எங்கு மகண்ட அன்புப் பெருக்கு
இங்குன நன்ன ரிதயம் நிறைக்கும்;
தண்ணளி, தியாகம், சுதந்தர, மிவையே
இன்,பொளி, யன்பா மின்சுவை யூற்றாய்
உளத்திருந் திழிந்து, உலவிடு மெங்கும்,
நித்திய னீயே! தெய்வமும் நீயே!
உத்தம உண்மை ஆகுவை நீயே!

## 26. அன்னை

அன்னையின் மடியில் அமர்ந்தவள் முகத்தை
அன்பு ததும்பும் கண்கொடு நோக்கு;
அவளன் பணைப்பாம் ஆதரம் பெறுதி;
உனைநிலத் திட்டவள் ஏகிடும் காலவள்
பின்னீ சென்றுபொற் கால்களைப் பற்றிநில்;
அழேல்நீ; வாய்திறந் தருமொழி பேசேல்;
அன்பால், விழிநீர் ததும்பநோக் குவையேல்

அவளுநனை அணைத்தெடுத் தாதரம் அளிப்பள்
உருகி அவளொடும் ஒன்றிடு வாயே

## 27. குறிக்கோளாகக் கொள்கநீ யவனை

இறையொடு மியைந்துன் சிற்றுயி ரதனை
அவனுள் அழுத்தல் நித்திய னந்தம்;
மேனிலை, மிகுபுகழ், தூய்மை,இன், பிதுதரும்
அன்பே கடவுள்; இன்பமும் ஒளியும்;
அவனுன் குறிக்கோள் ஆகநீ கொள்க;
உன்னுடை யுடம்பின் ஒவ்வொரு நரம்பும்
இறையுணர் வாலே துடித்திட வேண்டும்;
இன்பம், விடுதலை, இனிதுற வேண்டின்,
இறைவன் இன்பில், மூழ்குவை நீயே;
இறைவன் தோற்றமாய் இனிநீ வாழ்வை;
உண்மையி லிறைவன் ஆகுவை நீயே.

## 28. கடவுள் நினைவு என்னைப் பிணித்தது

இறைநினை, வெனைப்பிணித், துயர்மெய் ஞானம்
உற,இது தருநல் ஒளியொடு மின்பொடு
முலகில், மயங்கினன் போல வுலைந்தனன்;
என்னுளிப் பிரபையுள் எல்லாம் இறைமயம்;
என்னுணர் வனைத்தும் இன்ப மயம்; பே
ரின்ப ரூபனு யாகினன் யானே;
அனைத்து உல,கவை யல்லவும் யானே;
நித்தியப் பொருளின் தெரிசன மதனில்,
ஒத்து அனைத்துப் பொருள்க ளெவையும்
அன்பு, களி,தரும் அமரவாழ் வதனுள்
ஒன்றே யாகி யுலவிய தாமே.

## 29. அன்பே ஆன்மா

நித்திய ஒளிசேர் சித்தொன் றுன்பால்;
அத்தகு மொளி,வாழ் வருமறைப் பொருளை
தெள்ளிதிற் புலனுத் தெரித்திடு மென்ப;
அனைத்துப் பொருளையா னந்த வமுதுள்
அழுத்து மனந்தவன் பாதமா வுன்பால்;
அகில வுலகி னதிசய மாக்கும்
நிகரில் எழிலுடை சக்தியொன் றுன்பால்;
அன்பே, ஒளியே, அழகே, அவையொடு
சித்தே, ஆன்மா, சக்தியு மாகு
முண்மையொன் றுன்பால் உளதென வறிநீ;
மாண்தகு முண்மை நீயென அறியே.

## 30. ஆத்ம சமர்ப்பணமே தக்கது

கீழ்மை இயல்பு கிழமையாக் கொண்டு
ஆழ்ந்து யானென் மயக்குள வரையில்
ஆத்ம அனுபவம் அளவிலா னந்தம்.
அமைதி யுனக்கு அளிக்கா வரையில்
அமைவுறுன் வாழ்வை, அன்,புயர் தூய்மை,
எளிமை அணியா வியற்றிடா வரையில்,
ஆத்ம சமர்ப்பணம் ஏற்றது நினக்கு;
சமர்ப்பண மென்னெனில், சாற்றுதும்; உன்னை,
அகில மனைத்தா மிறைவனுக் கர்ப்பணி;
தயங்கி மயங்கித் தடுமா றுன்னை
இயங்கிடு பூரண னந்த,மெய் ஞானமாப்
பெருகிடு மிறைக்குப் பிறங்கிடா தர்ப்பணி;
"அழிவில் நித்ய சுதந்தரன் யானே;
ஒளிமிகு மொன்று முண்மையும் யானே;

அனைத்தும் யானனைத் துட்பொருள் யா" னென
ஆணவ மெரித்த நீற்றுமேல் நின்று
உண்மை யறிந்து னுணர்வெலா மொத்து,
அகில மெங்கணும் அறிவிப் பாயே.

## 31. நான் யார்

உலக முழுதில் உலவுபல் தோற்றம்
தனைமுன் காணினும், யானே யகிலம்
அனைத்தும் நிறைபொரு ளெனவுணர் வுறுவன்;
காலால் நடப்பன்; கையாற் பணிசெய்வன்;
என்னுளத் தெழுமெணம் அமைதிக் குமிழி;
என்னுடை எல்லையில் வாழ்வெக் காலையும்
மாற்றமும், அசைவும் இன்றிநன் கிலங்கும்;
ஒளியினைக் கண்டப் பிரபையுள் அமிழ்ந்தனன்;
இருளினு ளுறைவனக் கருமிருட் கலப்பன்;
நீனிற வானை நிமிர்ந்துயா னோக்குவன்;
அன்னதுள் ஆழ்ந்துயான் நீனிற மாகுவன்;
வானத் திடிசெய் ஒலியொடு சென்றப்
பேரொலி யுடனே இயைந்துநான் சுழல்வன்;
இடியும் மேகமும் இங்குயா னுவன்;
விலங்கே, பறவை மக்களைக் காண
உளஅவை அனைத்தும் யானென, என்றன்
உள்ளுணர் வெனக்கு எடுத்துநன் கியம்பும்;
யானியங் கிடுமிவ் வுலகில் இயங்கு
பல்வகைத் தோற்றமும் யானே ஆவன்;
மதியே, கதிர்,விண் மீனெனை நோக்கி
யானும் தாமே எனமிகக் கொள்வன.
உலகிற் கப்பால் உறைந்து பணிசெய்

ஒருவன் போலுமென் றுணருவ னொருகால்—
அன்று ; அனைத்துப் பொருளொடு மொன்றுவன் ;
உலக மனைத்தும் என்னுரு ; அதனுள்
மன்னுயிர் எல்லாம் என்னுயி ராகும்
எத்தகை அற்புதக் காட்சியி, தென்னை
ஆட்கொண் டருளிய சக்தி செலுத்திட
ஆதி, அந்தமில் அமைதி விடுதலை
அனுபவித் திடுமொளி கண்டனன் யானே.

## 32. அன்பின் இயல்பு

சேவையும் தியாகமும் செய்யா திங்கு
மேவிடு மன்புய ரன்பா காதே ;
பிறர்நல, மவர்பெறு மின்ப மதற்காத்
தனையர்ப் பணித்தல் தக்கவன் பென்ப ;
தன்னல மில்பணி தூயநல் வாழ்வு ;
வாழ்க்கைச் சுடரிது, அழியா தெதையும்,
ஒளியும், காந்தியும், உதவிச் சுடர்க ;
அறிவே அன்னதன் காந்திய தாகுக ;
அன்பே அதனின் ஒளியுமிங் காகுக ;
அறியா மையிங் ககன்றொழிந் திடுக ;
வெறுப்பென் இருளும் விட்டு விலகுக ;
உறுக,அவ் விடத்தே உயரிய அன்பு ;
அன்புயர் அறிவுக் கிறைவா, மக்கள்
உள்ளத் தெழுகநீ ; உன்னரு ளெங்கும்
பொலிவுற, பிறங்கு பேருல கென்றும்
ஒற்றுமை, சாந்தி உற்றுவா ழியவே.

## 33. யானும் உலகும் கடவுளும் ஒன்றே

அற்புத வொளியென் உயிரை நிரப்பி
உயரிய இன்புக் குய்த்தது காண்க.
என்னுடை ஆத்மா இன்னிதின் மலர்ந்து
அகிலத் துயரிய ஆத்மா வாயது;
யான்பெறு ஞானக் காட்சி யதனில்
காலமும் இடமும் கடுகிமுன் னிற்பன
உலகனைத்தும் உரையினுக் கெட்டாப்
பூரண வுண்மைப் புகழினில் மூழ்கும்;
நித்தியம் கால நிர்ணய மழிக்கும்;
எல்லையில் மோனத் திடமது மறையும்;
காரண காரியம் ஒன்றையொன் றிறுகப்
பற்றிநின் றுறுமப் பரம்பொரு ளதனை;
அனைத்து மடக்குமவ் வருளொளி யுள்ளே,
யானும் உலகு மிறைவனு மொன்றே.

## 34. கண்ணும்பூச்சி

அன்பன் உறையு முலகி லுளன்யான்;
இன்பம், ஆதரம், துணியெலா மவனே.
விலங்கே, பறவை, மனிதர்தம் முகத்தில்
ஒருங்குபே ரன்பன் ஒளியான் காண்பன்.
மக்கள் தமக்கு யான்விடும் வேண்டுகோள்
ஒக்கவன் பனுக்குயா னுவந்துசெய் பிரார்த்தனை.
மக்கள் தமக்கே மகிழ்ந்துயான் செய்பணி
மிக்கவன் பனுக்குயான் செய்திடு வணக்கம்;
மக்களின் விலகிய மாணிறை எனக்கிலை;
நித்திய வீடிவ் வுலக மெனக்கு;
அத்தகு முலகென் அன்பன் ராச்சியம்;

பூரண வின்பம் விடுதலை பொலிய
அவனும் யானும் ஒளித்தும் பிடித்தும்
என்றும் ஈங்கு நின்ரு டுவமே.

## 35. வாழ்க்கை இனிது

கைத்திடும் வாழ்வு சிலருக் காயினும்
உய்த்திடும் வாழ்வெனக் குறுசுவைத் தாகும்;
குழப்பமிவ் வாழ்வில் சிலர்கண் ணுறினும்
அளவில் அமைதி அங்கெனக் காகும்;
ஏனென வினவின் இயம்பக் கேண்மோ:
என்னுடை வாழ்வோ ரொளிச்சுட ராக
இறைவன் கோவிலுள் இனிதாச் சுடரும்;
பாதம் பணிந்தே பரமனுட் புகுமிது.
என்னுடை இறைவனை யானுளே கண்ட,னென்
னுள்ளம் அவனின் ஒளிசுட ராலயம்;
அவனென் தலைவ னற்ருயு மாவன்;
யானவன் அடிமை குழவியா குவனே.

## 36. அதிசயம்

அதிசய மிதுகாண்; அன்பனெ டாடினன்;
உற்றஅவ் விளையாட் டோய்விலா தாடையில்,
என்னுடை அன்பன் இமைப்பில் மறைந்தனன்;
அன்பன் யானென் உணர்வுயான் பெற்றனன்;
பின்னையென் அன்பன் தோன்றயாம் ஆடினம்.
இமைப்பினில், யான்பின் எங்கோ மறைந்திட
என்னுயி ரன்பன், யானும் தானும்
ஒருதா னுக உலவின னுங்கு;
யாரறி வாரிவ் வாடல் ரகசியம்?
யானறி யேனவன் தானறி யானே.

## 37. என்னுடை வாழ்வு அவன் வாழ்வொடு கலந்தது

இறைவன் அளித்தனன் எண்ண மெனக்கு
அறி,வொளி, யோடு சுடர்களஞ் ஞான்றும்;
வாக்கெனக் களித்தனன் வள்ளல்; அதுபே
ரன்பு மொழியாய் அதரம் பொழிக;
உடலை எனக்கு உயர்ந்தோ னளித்தனன்
சேவை தினமும் செய்தது தேய்க;
இவ்வண மாயென் எண்,மொழி, செயலால்,
இறைவன் வாழ்வோ டெந்தன் வாழ்வும்
இனிதா னந்தமாய் ஏகத் துவமதாய்
சாந்திபெற் றுய்யச் சார்ந்த துவந்தே.

## 38. செயலின்மையில் செயல்

வாத்தியம் மௌனம் வாய்ந்து விளங்கிடக்
கோத்தசீர்த் தந்ரி குலவொலி கூட்டும்;
சிந்தனை, சாந்தம் திகழ்ந்து சிறப்புற
ஆன்மா தனிலே அசைவும் ஏற்படும்;
சாந்தமும் செயலும் சரிசம னாகப்
போந்திடும் மாணப் பெரிதாம் யோகம்.
அமைதி தானே அசைவில தாகும்;
செயலது தானே இயைபில தாகும்;
ஒத்திவை தாமே ஒருங்கு புலப்பட
பரமா னந்தம் பரவுறு மமைதியொ
டொத்தொலித் திடும்நித் தியவின் னிசையே.

## 39. வாழ்வு சேவைக்கே

சேவை, தியாகம் செயற்கிவ் வாழ்வு;
இவைஇயற் ருவிடி னிலங்கிடுன் வாழ்வை
நலிவும், நோவும் நன்குறுத் தும்மே;
ககனத் துலவும் கார்மே கம்மென
புவனத் துளபொரு ளனைத்தினும், மேலா
மின்பம், சாந்தம் எனுமழை பொழிக;
மலையில், தரையில், மாண்பினை அளிக்கும்
பருவ மழைப்பின் பசுமைதோன் றல்போல்
மனித வியல்பின் மாண்பை விளக்குக;
நன்மை, நேயம், தயையொடு நிலவிப்
பிரபல சக்தியாய் பொலிகவுன் வாழ்வே.

## 40. ஞானம், நேயம், இன்பம்

நித்திய ராச்சியம் நீயெழுந் தருள,
உதித்திடு கதிரொளி போலுன் னினைவு,
ஞான மதனுல் நனியொளி ரும்மே;
ஞானமெய் நோக்கு நல்லுயிர்க் கேற்பட
வானத் துலவு மதியென, தண்ணிய
நேயமுன் னுளத்து நிலைத்துநிற் கும்மே;
உண்மை யுனைத்தனக் குற்றதாப் பற்றின்,
தெய்வ முகத்துத் தெரியொளி நகைபோல்,
எல்லையில் களிப்பிலுன் உயிர்விடு தலைபெறும்;
இன்பம், ஞானம், நேயமொ டியைந்த
ஒருரு விப்போ வாகினை நீயே.

## 41. அன்னையே பெரியள்

புகழென் பிரபல பலத்தொ டியைந்து
அகந்தையும் வெறுப்பும் அரங்கி லுலவும்;
அச்சந் தரு,மா கரிக வெறியென
இச்சை மிகும்; இருங் காமம் எழுந்திடும்,
மரணக் கூத்திலெம் மாதா மகிழ்வள்;
உயர்வு, சாந்தி, ஒளிர்ந்திடு கண்ணால்
அழிதொழி லாக்கும் அற்பரை நோக்குவள்;
நீரிற் குமிழி நிலைத்திடா வாறென
தேரி னனைத்தும் திடுமென மறையும்;
அவளது நிகரில் சக்தியை எதிர்ப்போர்,
மேவிடு மிழிபொருள் மேட்டில் நசித்து,
எறியப் படுவர் என்பது திண்ணம்.
அன்னையின் விருப்புக் கனைத்தும் அடக்கம்;
சர்வ வியாபகம் சக்தியின் நாமம்;
கொடியரை வீணரைக் குலைத்தொழித் திடுவள்;
நலிவுற் றோர்,நற் றுணையில் லார்,தனை
யணைந்தோர்க் காதரம் அளித்தாள் வாளே.

## 42. ஆதியை அறிக

வாழ்விதை தெய்வ சமர்ப்பணம் செய்தபின்
ஆழ்ந்த சாந்தி, அன்,புயி ருற்றபின்,
அதுதன் சக்தி, மகிமையை, அறியும்;
நித்தியப் பொருளில் உளதுயிர்த் தோற்றம்;
உத்தம வறிவால் உணர்கநீ யிதனை;
ஆதிப் பொருளின் அருளினைப் பெற்றதை,
பேசொணு வன்பு,பே ரின்புறு தொழில்கள்
தேசுறு மொளியால் நிறைத்திடு வாயே

## 43. உன் உண்மை இயல்பு

நீதே டுண்மையுன் னுயிரின் சத்துவம்;
உள்ளும் புறமும் உளதா முயிர்த்தொகை;
பகுதிப் பொருளின் பருப்பொரு ளதுவே;
பருப்பொரு ளதனின் பகுதியு மதுவே;
நித்தியா னந்தம் போர்த்தநல் நேயம்;
நிறைவில் பொருளில் நிறைந்து விளங்கும்;
உறுமேற் பொருளில் உற்றினி திலங்கும்;
பல்வகை உயிரிற் பலவாய்ப் புலப்படும்;
உருவினுள் எல்லாம் உருவம் அதுவே!
அருமொளி யதனுள் தெரியொளி யதுவே!
சர்வவல் லமையும் ஞானமு மதுவே!
அனைத்து மடக்கியு மெண்ணுக் கடங்கா
தினைத்தா முண்மை நீயெனு மியல்பை
அறிந்து விடுதலை உற்றிடு வாயே.

## 44. உண்மைச் சமயம்

உள்ளந் தனிலே இறையொளி நிரம்ப,
உண்மையின் சக்தியுன் னுயிரையூக் குவிப்ப.
இறைவன் தன்னோ டியைந்தனை நீயே;
சமயம் என்பதோர் தொழிலல, சாற்றின்,
இறைவ னோடியைந் தின்னிதின் வாழல்;
இறைவன் பணியே உவந்துசெய் திடுதல்;
அன்பொடு பக்தி, பணி,நீ செய்யிறைக்
கனைத்தினும் காணும் மேலா மன்பனுக்
கின்பொடும் பூரண விருப்பொடு முனையே
சமர்ப்பித் திடல்நற் சமயமா கும்மே.

## 45. நித்தியன் உன்னை நீயறிந்திடுக

உலக விருப்பா லிருண்டதொ ருள்ள,முள்
நிலவிடு தெய்வ ஒளிமறைத் திடுமே;
ஆணவம் ஓங்கி ஆட்சி செலுத்திடும்;
வீணும் பெருமை எண்ணெலாம் பற்றித்
திருப்பிடும்; ஆத்மநல் லூற்றைத் தடுத்திடும்;
எதிர்த்திடு இதனை; எதிர்த்திடிப் பகையை;
ஆன்மா வதனை நசித்திடு மிதையெதிர்;
அச்சந் தருமிந் நிழல்கிழித் துந்தன்
ஆதிநன் மூலமாம் அன்பனை நோக்கு;
யார்நீ என்பது அறிந்திடு; மாய
மயக்கொழிந் தெழுந்து மன்னுக; உன்றன்
உண்மை இயல்பினை, நித்திய னுன்னை,
அறிந்தரும் ஞான வாழ்வுநீ வாழ்க
சரிநிக ராகச் சகமெலாம் நோக்கு;
சரிநிக ரன்பு சகமெலாம் கொள்; பணி
சமபலத் தோடு சகமெலாம் செய்யே!

## 46. எனது இலட்சியமும் உன்னதே

உந்தனை ஒத்தபல் லுயிரொடு, நீயும்
உயிர்த்திடு காற்று, உற்றிடு மொளியும்
உறைந்திடு நிலமும் ஒன்று குமமே;
என்னுடை நில,முன் னிலமதின் வேறெனல்,
என்னுடை லட்சிய, முன்னதன் றென்னல்
ஏனோ? அறியாய் உண்மை; அனைவரும்
இன்பம், சாந்தியே இலக்காக் கொள்வர்;
அன்பு,நல் லெண்ணம் அனைவரும் வேட்பர்;
நோவுந், துயரும், வெறுப்பும் நல்கும்

சுயநல மெனுமேற் போர்வை யுனக்கேன்?
களைந்தெறி; உன்குறிக் கோள்நீ அடைவை;
வேட்கை தணிவுறும்; விழுமிய நேயம்,
சாந்தியுற் றென்றும் வாழிய பெரிதே.

## 47. தெய்வ இரகசியம்

எங்கணு முனையே கண்ணுறின், இறைவன்
பொங்கொளித் தெரிசனம் பெற்றனை நீயே;
திடமொடு நீயவன் என்றுணர் வுற்றிடின்,
கடவுள் ஞானம் கைவரப் பெற்றனை;
தன்னல மின்றியுன் வாழ்வு பெருகிடின்
அன்பன் பணிநீ அமைவரப் பெற்றனை;
அனைத்திலும் சமமா யன்புநீ கொள்ளின்
இறைவன் னேயம் இனிதுநீ யுற்றனை;
என்று மின்பம் பற்றிடின், இறைவன்
குன்றுக் களிநீ குலவிடப் பெற்றனை;
இருமை இயல்விடுத் தெழுந்தனை யாகில்
இறைவன் விடுதலை எய்தினை நீயே.

## 48. அவன் அழைப்பை ஏற்றிடு

நித்திய மாம்பே ருண்மை,யுன் னுள்ளத்
துத்தம வொருநல் லன்பனு கும்மே;
பிறவினை யாதே, பக்தியு, மன்பும்
உறுமதன் பாலே உவந்துசெய் துறைக;
உன்னை யவன்கைக் கொடுத்திடு; அவனின்
ஒளியால் ஊக்கம் உற்றிடு; இறைவன்
இன்னிசை நல்வழி காட்டிய தாகுக;
அவன் துணை, இன்பம், பலமு, மாயிடின்
நோவும் பயமும் நினக்கிலை இனியே;
மிளிர்ந்துய ரமைதியொ, டிழிந்திடு மூற்றென

களியுட னுடியிவ் வாழ்வு பெருகிடும்;
நண்பா, எழுந்தவ னழைப்பைநீ கேட்குதி;
உன்னுடை யுளத்தில் எழுந்தஇவ் விசையை
ஏற்றிடு; அனைத்தையும் தியாகம் செய்திடு;
அறிந்திடு, உந்தன் அன்பன் நீயே.

## 49. அனைத்தும் யானே

உள்ளத் தன்பு ஊறிப் பெருகிட,
தெள்ளொளி மனதில் நிரம்பித் திதழ்தர,
என்னிறை வனையான் கண்டனற் பொழுதை,
இன்பப் பெருக்கில் இயம்புவன் யானே;
இறைவ னொளியென் கண்ணி லிலங்க,
உறுமுயி ரனைத்திலும் பெருகிய தன்பு;
மக்கள், விலங்கு, பறவை முதலாத்
தொக்க வுலக வுயிர்களும் வெளியும்
ஒளிர்விண் மீன்,மே லுலவுமண் டல,மென்
றனைத்து மிறைவ னுருவாய்த் தெரிந்தன;
உவமையில் களிப்பும், முதியதொ ருணர்வும்,
என்முழு வதையும் பற்றிய திறுக;
அழிவில் தெய்விக உண்மையான்; அனைத்துப்
பொருளி னுயிர்நான் என்றுணர்ந் தனனே;
யானு,மென் னிறையும் ஒன்றென் றறிந்தனன்.
உளவுயி ரனைத்தும், யானும் ஒன்றே;
யானும் எல்லாப் பொருளும் ஒன்றே;
அனைத்துநல் லுலகும் யானும் ஒன்றே;
அறியும், அறியா வகில மனைத்தும்
வானும் நிலனு மனைத்தும் ஒன்றும்
ஒளியா யுலவிடும்; அன்பொன், றழிவில்
ஆத்மா வொன்று; யானது தானே.

## 50. சத்தியமதனுள் சாந்தி யான் கண்டனன்

அளவில் அகிலத் தெங்கு மலைந்தனன் ;
அமைதி நிலவு மிடம்யான் கண்டிலன் ;
எல்லையில் வெளியில் இதையான் தேடினன் ;
மெல்லெனச் சாந்தி மேவிடம் கண்டிலன் ;
ஒளிமண் டலத்துள் உளதெனத் தேடினன் ;
உளகதி ரொன்றும் உறுதுயர் தீர்த்தில ;
துயர்வா னத்துள், ஓய்வுக் கலைந்தனன் ;
மயலொழித் திடுமாண் விடுதலை பெற்றிலன் ;
சீருறு சத்தியத் துட்புகுந் தாழ்ந்தனன் ;
ஏர்பெறு விடுதலை இனிதுயான் பெற்றனன்
இலை,யா னில்லா இடமென் றறிந்தனன் ;
நிலம்,வெளிப் பரப்பில் நிறைந்தனன் யானே !
நித்திய சாந்தம், நிலைபெறு மின்பம்,
உத்தம விடுதலை யாவதும் யானே !

## 51. அறிவே விடுதலை அளிக்கும்

உள்ளமென் னடைப்பினு, ளுறைந்திடு நல்லுயிர்
துள்ளித் துடித்திடும் விடுதலை நாடி ;
மனமயக் கிருளில். மயங்கிடு மான்மா
மன்னொளி யதனை மிகவேட் கும்மே ;
ஒளி,விடு தலையெலா, முள்ளன வுன்னுள் ;
உள்ளம் திருந்த,வீண் கட்டணு காதுனே ;
எங்குநீ செல்லினும், உறைவதெங் காயினும்,
எத்தகை நிலையிலும், எனைத்துச் சார்பிலும்,
நித்திய னுன்னை யுணருநல் லறிவு
உற்றிடின் விடுதலை உற்றனை நீயே.

## 52. இறைவனை வணங்கு

அழிந்திடு பொருள்கள், கழிந்திடு செயல்கள்,
எவை? எதற் கென்றுன் அறிவை அலையேல்;
உலக அறி,வுயர் பள்ளிப் படிப்பால்,
நிலவிடு பெருமை, நினக்கா காதே.
இறைவன் தீர்ப்பை ஏற்றுநீ வணங்கு;
நிறைந்த அறிவன், சர்வவல் லபனவ்
விறைவன் சக்தியிவ் வுலகை இயக்கும்;
பக்தி, பணிவு, பொறுமைகொண் டிரு; அவன்
சக்தியு மொளியு,முற் சார்ந்தொளி தருக;
உள்ளும், புறமும், உனையலை வேட்கையை.
விள்ளும் அமைதி, விளங்கநீ செய்யே.

## 53. யார் நீ?

தெய்வ சிந்தனையில் திளைத்துநீ மூழ்க,
எல்லையில் வாழ்வில் இனிதுநீ இருப்ப,
ஆத்ம பரவசம் அடுத்துனைப் பற்ற,
ஒத்து உலகம், கடவுளும், நீயும்,
ஒன்றே யாகின், யார்நீ? உரையாய்;
ஒன்றே? பலவோ? உருவோ? அருவோ?
அசைவுனக் குண்டோ? அன்றியஃ திலதோ?
ஏகமோ? எங்கும் நிறைந்ததோ? என்ன
வாக்கால் விரித்து வகுத்திடல் சாலுமோ?
அந்தம், மாறுதல், அளவில லாது,
அனைத்தும் தன்னுள் நிலைத்ததும், இல்லதும்,
இன்பப் பிழம்பா மிதுவே யாகும்;
மேன்மை விளங்குநற் சாந்தி நிறைந்து
அன்பும், அழகும், இன்பும், மன்னும்
பிரபை ஒளியுட் புலப்படக் காணும்;

மொழியொணு வாய்மையே! முன்னிய வாழ்வின்
அழிவிலா விதையே! அதன்னறுங் கனியே!
இனிமையுள் எல்லாம் இனிமையே! உன்னை
வாழுக! வாழுக! எனவாழ்த் துநுமே!

## 54. அதிசய உண்மை

சகல வுலகுமென் சாயையா வெந்தன்
ஆத்மா வாயநல் லாடியுள் காண்பன்;
எவ்வுயி ரேனும் என்னின் வேறல;
எவ்வகை வெளியுந் தழுவுவிண் ணீலமும்,
வியர்ப்புறு நிலனை விசிறுமென் காற்றும்,
கொதிப்புறு மணலை யாற்றுதண் தாரையும்,
இமையா தொளிரும் கதிர், மதி, விண்மீன்
இவையும், பல்வகை வடிவும், உருவும்
என்னொடு பிணைந்த உருவம் ஒன்றே;
எங்கும், எல்லாப் பொருளும் ஆகி
இங்கு பெருகினன் யானெனக் கண்டனன்;
அனைத்தும் யானுய்க் கண்டெனை யுணர்ந்து
இனைத்தா மின்பப் பெருக்கினி லாழ்ந்தனன்;
தூய வா னந்தமென் சத்துவ மாகும்;
தூயநற் களிப்பாம் என்முழு உணர்வும்;
உவகை தனக்கா உரையொணு வுலகாய்
உதித்திடு நானே ரதிசய வுண்மைகாண்;
ஏகம் யானிங் கெல்லாம் யானே.

## 55. இறைவன் விளையாட்டு

அன்பென் இசையால் அகம்மிக நிறைய,
அறிவென் கதிரோன் மனத்தொளி யாக்க,
வாழ்வில் இசைந்த இன்ப மிலங்கும்;

உண்மையே, அன்பு, மறிவு,மா னந்தமும்;
அன்பே, உண்மை, யழகா கும்மே;
ஆத்ம நல்லொளி, அறிவு மாகும்;
பரவசச் செயலே! பழுதிலா னந்தமே!
உள்ளத் துணர்விலும், புறப்புலப் பாட்டிலும்
தெள்ளெனத் தெய்வ வியல்பொடு திகழ்வை;
இறைவன் தானே விளையாட் டயரும்
இவ்வகை வாழ்வோர் தெய்வவின் னிசையே.

## 56. எங்கும் உன் அன்பன்

வாழ்வின் திரையைத் துளைத்தகக் கண்ணால்
அழிவில் மூலப் பொருளினை நோக்கின்
எதைநீ காண்பை? நின்கரம் நீட்டி
உன்னரு முயிரை யெங்கணும் பரப்பி,
உலக மனைத்தையு மணைத்துநீ பற்றின்
ஒளியென வெங்கும் பரவுய ரன்புன்
உள்ளத் துதித்துப் பெருகிடு மிங்கு;
எல்லா வுயிரிலும், பொருளிலும் புலனும்
அன்பனை, இங்கும், அங்கும், எங்கும்
இப்போ தினிது நீகண் டனையே.

## 57. உண்மை மாட்சி

வாடுயர் வாகை பெற்றவெற் றியினில்,
தேடிய வநித்ய செல்வ மதனில்
களியாட் டயர்ந்து கழித்திடு நாளில்
மனித னுயர்வு மாணுறு தென்றும்;
அழியா மகிமையும். அழிவில்பே ரின்பமும்,
ஒழியா வாழ்க்கையும், இன்பமும் பெற்று,

மக்களுட் சிறந்து மகிழுதல் கூடின்,
விண்ணுள மீன்போல் உண்மை யொளியில்
மன்னுவன் ; அன்றியும், நறுமண மலர்போல்,
ஆத்மநல் நேயம் எங்கணும் பரப்புவன் ;
பாலன் முகமெனப் பரவுபே ரின்பக்
கோலக் கதிரைப் பொழிவனெங் கணுமே.

## 58. எனது அன்பனும் யானும்

உள்ளக் கோவிலில் உறைவனென் னன்பன் ;
அன்பன் நினைவே இன்பமும் ஆகும் ;
என்னுடை வாழ்வவன் வாழ்வொடு கலத்தல்,
உரையினுக் கெட்டா வின்பம தாகும் ;
உரையா டுவ,னவ னொடு,விளை யாடுவன் ;
அவனொளி தன்னுள் யான்மூழ் கிடுவன் ;
புல்லின் பசுமையில், பயன்கெழு வானின்
னீல நிறத்தினில், நிலவுமென் காற்றில்,
கோலநல் திரைகள் குலவுகுன் றதனில்,
என்கண் கொண்டவன் தன்னையே காண்பன் ;
அவனில் யானுளன் ; என்னில் அவனுளன் ;
அவனும் யானும் உண்மையில் ஒன்றே.

## 59. இறைவன் எங்கே?

மனவா ழத்தில் மன்னுமென் னிறைவன்,
தனததி காரம், தகுபுகழ், என்பன
இங்கிருந் திறைவன் எங்கும் பரப்புவன் ;
இங்குறைந் தளவில் உலகாய்த் தோன்றுவன் ;
அநந்தன், நித்திய வாழ்வினன் அவனே ;
எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன்,

உருவன், உருவிலன், கட்புல னுருகுவன்,
காணொணு திருத்தலு மவனே யாகுவன் ;
ஒளியினுள் ஒளியிவன் ; வலிமையுள் வலியவன் ;
உண்மையும், அறிவும், இன்பமும் அவனே !
இறைவ னித்தகை மேன்மை யியல்பினன்.
தற்புலப் படுத்தித் தன்னை விளக்கிடும்
யானும், நீயும், அனைத்தும், அவனே !
எத்தகை தெய்வ வின்பமிவ் விசைவு !
எத்தகை யினியதிந் நித்திய விசையே !

## 60. தெய்விக வாழ்வு

உண்மை தனைநீ யுணருதல் வேண்டின்,
நின்னுடை வாழ்வில், நித்திய வின்பம்
மன்னி,நற் சுவையும் மிகுத்திட வேண்டின்,
சாந்தி நிறைக,வுன் ஆத்மா தனிலே,
உந்த னுளத்தூய ரன்பலை எழுந்து
அண்டம் நிறைந்த அளவில்பண் ணிசைக்க ;
உண்மையாய் வாழல் வேட்கைநீ ஆயின்,
நித்தியப் பொருளொடு நிலைத்துநீ வாழி !
விண்ணின் னகையுன் முகத்து விளங்குக ;
தெய்வமுன் விழியுள் துலங்குக ; வாழ்வை
இறையொடு கலந்து இன்ப முறச்செய் ;
இதுவுன் லட்சியம், இதுவலா லிலையே.

## 61. கருணையின் செயல்

**ஆத்மா—**

நண்பா, நாமிரு வேமுமொத் தெம்மை
உள்ளத் துறையுய ரிறைக்கர்ப் பணிப்போம்.

மனம்—
வேண்டாம் எனக்கிது; எனக்குறு மின்பம்
உண்டென் புலனில்; அதையான் ஒழியேன்.

ஆத்மா—
குன்று திலங்கு தூயநல் லின்பம்
என்று மிறையில் நீகாண் குவையே.

மனம்—
நம்பலன் யானிது; இப்பொழு தெய்து
மின்ப மனைத்தும் நிலையில தெனினும்,
கற்பனை செயுமோ ரின்ப மதற்கா
யானிதை நீத்து வாழ்கிலன் திண்ணம்.

* * * *

தெய்விக அருளால் நித்திய ஒளியுயிர்
பெற்றிங் குள்ளத் தின்பம் நிறைதர
மனம் சொலும் "மாண்புடை நண்ப,
எத்தகை உண்மை நின்னுடை மொழிகள்!
நித்திய வொளியும், சாந்தியும் நிலைத்து,
உத்தம பாலன் ஆயினன்; என்றும்
ஏத்தி,யவ் விறையைப் போற்றுவம் யாமே.

## 62. எழுகைக்கு விழுகை

தனியொரு மனிதன், தாபனம், தேயம்,
அனைத்தின் வீழ்ச்சியும் அகந்தைமுன் னுணர்த்தும்;
விவாதம், வேதனை யொடுதம் வாழ்வில்
நலிவும் நோவும் நண்ணப் பெறுவர்;
தாழ்நிலை எய்தி வீழ்ச்சியு முற,பின்
விழித்தெழு முள்ளத் தொருமையெ னுணர்வு;
அழியா வாழ்வில் அவர்தமை இயக்கும்

தாழ்ந்துசெய் தனிப்பெரும் பணிக்காப் பின்னும்
தூய்மையும் மேன்மையும் சக்தியு மளித்து
சாந்திநல் லெண்ணம் சகமெலாம் தந்தே.

## 63. அழகானது; உண்மையானது

தன்னல வேட்கைக் கறையொழித் திடுவரை
மாண்தகு நினைவு, லட்சிய, மூன்றன்
உள்ளந் தனிலே சுடர்ந்தினி தொளிர்க;
நின்னுடை வாழ்வு நித்தியம் அறிக;
அழியா வின்பதன் இயல்பென உணர்க;
இத்தகை அறிவு பெற்றுநீ நின்று,
இத்தரை மிசையே உயிர்களை மயக்கும்
நோயுந் துன்பமு மாற்றித் துடைக்கும்
ஏயுநற் செயல்புரி யியல்நனி ஏய்ந்து,
உலகின் பணியே செயலாக் கொள்க;
விலகுக வீண்பே ராசை; விலகுக,
வெளிப்பகட் டுடைய வகந்தைத் தோற்றம்;
நன்மல ரெனநீ நறுமண, மின்பம்
எங்கும் பரப்புதி; தெய்வநற் சக்தி,
தெய்விக சாந்தி, எழிலொடு, மேலும்
தெய்விக வுண்மை திகழநீ வாழே.

## 64. வாழ்க்கை தியாகம் செயற்கே

உண்மையை வேட்டத னுயர்வுற வேண்டின்
கல்லுளங் கொண்டதைக் கடுகநீ எண்ணேல்.
இல்லோர், ஏழையர், தாழ்ந்தோர் தமக்கு
உன்னுடை உயிரும் அன்புகொண் டுருகுக.
அகந்தை தருபொரு ளேன்? அழி புகழேன்?

ஆவலில் லோனுக் கமைதி கிடைக்கும்.
தனைக்கொடுத் தொளிரும் திரியது போல
ஒளிரினுன் வாழ்வு, எய்துவை யின்பம்;
இரகசிய மிதையறி; வாழ்க்கை யெதற்கெனில்
தியாகம் செய,வழி யாதிலை பெறவே.

## 65. எனது நித்திய அன்பன்

கண்ணில் மிளிரும் ஒளிநீ, யன்ப
என்னுளத் துலவும் இன்பம் நீயே;
உயிரில் ஒளிரும் ஞானம் நீ,யென்
னுணர்வு நிறைந்த சுவையும் நீ,எனைச்
செயலில் செலுத்தும் சக்திநீ, எந்தன்
என்பும் உருக்கு மன்புநீ, என்னுள்
உணர்ச்சி பெருக்குங் களிப்புநீ, எந்தன்
உயிர்ப்பில் பிராணன் நீ,யென் வாழ்வின்
எல்லையி, லின்ப பரவசம் நீ,யென்
னுருவுக் கணிசெய் அழகுநீ யாவை;
மன்னுமென் னுதலில் மகிழ்ந்துறை மாட்சிநீ;
பின்னுமென் னேக்கில் பிறங்கிடு மருட்சிநீ;
உடலில் தோன்று முயர்நறு மணம்நீ;
எனைச்சூழ்ந் தொளிரும் தெய்வநற் பிரபைநீ;
அன்ப,என் வாழ்வு முயிரும் நீயே!
எந்த னுயிர்ப்புமென் னனைத்தும் நீயே!
யானுனை யுடையன்; நீயெனை யுடையை
இத்தகை யின்ப மெய்தினன் யானும்;
உய்ந்தனன், உய்ந்தனன், உய்ந்தனன் யானே.

## 66. உண்மை மலர்கள்

அன்பென் மலர்கள் உண்மையென் காவில்
அலர்ந்தரு மின்ப நறுமணம், எங்கும்
பரப்பி ஒளிரும் பான்மைய தாகும்;
பல்வகைத் தோற்றம் பரவுமிவ் வுலகில்,
நல்வகை மலர்போல், ஒவ்வொரு வடிவும்
இறைவ னொளியெனும் வெம்மையி லியைந்து
நிறைவுறு நித்திய வின்ப முயிர்த்திடும்;
உல,குரு, வனைத்தா முண்மை யொன்றே.

## 67. உன் உள்ளக் கோவில்

அன்புக் கோவில் ஆக்குன் னுளத்தை;
எங்கும் சாந்தியென் னறுமணம் பரப்பு;
அறிவென் விளக்கை அங்குநீ யேற்று;
இன்ப மலரால் எழிலுறச் செய்யதை;
பின்னுனை யுவகைப் பெருக்குறப் பற்றி,
தண்ணரு ளிறைவன் பிம்பமாக் கும்மே.

## 68. மேலெழு

உண்மை, காதலென் உயர்சிற கிவர்ந்து
இன்னுயி ரன்பன் இருக்கைக் கெழுக;
சாந்தி, தூய்மையென் அங்கி அணிந்து
போந்து நீயவன் சந்நிதி நாடு;
இறைவர்க் கிறைபெய ரினிதாய்ப் பாடி,
நிறைந்தவுன் னுளத்து நீயிழு அவனை;
அன்பென் அஞ்சனம் கண்ணிணைக் கருத்தி,
அன்பனை யெங்கும் காண்குவை நீயே.

6

## 69. பரமாத்மாவாகு

இறையோ டியைந்த வாழ்க்கை யதுவே,
சமநோக் குடைய வாழ்க்கை யாகும்;
உள்ளந் தின்றத னுயர்நிறை வழிக்கும்
புண்ணும்; ஆத்ம விருப்புமந் நினைவும்;
எல்லார் பாலு மொத்திய லன்பால்,
தன்னைத் மாபர மாத்மா வாகும்.
நித்திய விசையால், நின்னுடை வாழ்வாம்
உத்தம கீதம் உற்றது நிறைவு;
நின்பா லமைந்த இறைவன் ஒளியும்,
அன்பு, கருணை, அமைவுறு சாந்தியும்
ஒத்த மாட்சியொ டுலகெலா மொளிருமென்.

## 70. உன்னை யறிக

பகலின் முடிவில் படுதிரை வீழும்;
அகலுதும் சாந்தியி னருமோ னத்துள்;
பொழுது புலரப் பொலிந்தது காட்சி;
தொழிலி னின்பால் நிறைபெறும் வாழ்வு;
சக்தியா ழுத்துட் சாந்தி யமைந்தது;
சக்திதோற் றத்துட் சமைந்தது இன்பம்;
வாழ்க்கையெம்மேலுயரொளிபொழிந்திடும்காண்;
நாள்ஒவ் வொன்றும், விடுதலை பெற்று,
இன்பம் சாந்தியுள் இருக்கவென் றேவும்;
உந்தன் மகிமையைக் காட்டுநல் வாழ்வே;
நித்திய சக்தியும் நீயென வறியே.

## 71. வாழ்க்கை

வளைந்து சுற்றுமென் வாழ்வாம் படர்கொடி
அளவில் வளைவும் நெளிவும் அமைந்து,
எண்ணில் காலம் இவ்வணம் வளர்ந்து,
நண்ணிய திப்போ நவிலரு மலர்ச்சி;
அழியா வின்ப மணம்கொண் டமைந்த
எழிலே நிறைந்த மலரினை ஏந்தும்;
ஒப்பொன் றில்லா தோங்கிய வினிமை,
ஒளியும் அழகும் ஒளிர்ந்திடு மதன்பால்;
அன்னத னுவ்வோ ரிழையும், அன்பின்
அளப்பரு மின்ப சாரம் நிறைந்தது;
ஒன்றாய் அழியா தமைந்ததொர் வாழ்வுக்
கொத்திங் கிசைக்கும்; வாழ்க்கை யிதுவே.

## 72. கருவி நானே

என்னுயிர்க் கிறைவன் கைகளில் யானே
அன்னவர்க் கியைந்த கருவிய தாவன்;
எவ்வகைத் தாய பணியான் செயினும்,
எவ்வகைத் தொழில்யான் செய்யினு, மென்னை
அங்கு செலுத்துவ னவனே யாவன்;
என்னுட லுயிரும் அவனதே யாகும்;
என்னுள் உறைந்தெனை ஆள்பவ னவனே!
எனக்கினி தாம்வழி காட்டுவ னவனே!
நண்பன் தோழன் ஆதரம் அவனே!

## 73. என் அன்பு

நின்பால் யான்கொள் நேய,மென் னிறைவ,
என்னையிவ் வுலகுக் கன்னிய னுக்கிய
தெனினும், நீயே அனைத்துமாக் காண்டலின்

இன்னுமிவ் வுலகை நயந்தனன் யானே.
நின்பணி எனு,மோர் தனியெலனைப் பூட்டினை;
உன்பணி களிப்பொடு மியற்றுவ, னிறைவ,
நின்கதி ரொளியெனைத் தெளிவுறச் செய்ய,
நின்னிரு கரமெனக் காதர மாக,
நின்பால் யான்செய் நிகரி லன்பு:
துன்பம் கவலை தளர்வறி யாதே;
தெய்வவின் னிசையின் கீதமென் வாழ்,வுன்
அன்பும் பணிக்கு மாகயான் வாழ்வன்;
உள்ளெலாம் நிரம்புமுன் னன்பே இனிது;
எந்தன் உடலின் ஒவ்வோ ரணுவும்
சிலிர்த்திடச் செயுமுன் சேவைநல் லின்பம்;
என்பே ரன்பன் என்றும் நீயே.

## 74. நிறைவு

ஆவல் மிகுமென் மனவா ழத்தில்
காதல் வெள்ளம் கவிந்தெழுந் ததுகாண்;
காண்பொருள் காணுப் பொருளெலாம் கரந்து
மாணொளி யாக மலர்ந்தது அதுவே;
பற்பல வுலகும் அடக்கியிவ் வுள்ளம்
உற்றது எல்லையில் ஒளியினு ளுயர்வு;
எழுத, உரைக்க, எண்ணவொண் ணுத
முழுமையும் நிறைவும் முன்னிய திதுவே.

## 75. உன் பெயர்

அளப்பரு மாழக் கடலெனும் வாழ்வுள்
துளைந்துன் பெயரா மருமணி கண்டனன்;
நின்பெய ரினிமை சுவைத்திடு வரைநான்

இன்னமு தூற்று எல்லாம் பருகினன் ;
மதியை, கதிரை, விண் மீனையான் னோக்கினன் ;
துதிபெறு முன்பெய ரொளியங் கிலையே ;
என்செவி மடுத்த இசையெவை தனிலும்
நின்பெயர்ச் சந்தக் களியான் கண்டிலன் ;
இங்கும், அங்கும், எங்கும் புகலிடம்
தேடியுன் பெயரே தஞ்சமென் றுற்றனன் ;
நுண்பொருள்பெரும்பொருளனைத்திலும்நுழைந்து,
இன்பம் தேடினன்; உன்,னற் பெயரில்
நித்திய வின்பம் நிறையவுற் றனனே.

## 76. வெற்றி

துன்பக் கருப்பையுட் பிறக்குமின் குழவி ;
சேற்றுள் தோன்றும் சிறப்புறு தாமரை ;
இருள்வான் காட்டு மொளிசேர் நீலம் ;
கோர விருளில் குலவிடு மொளியும் ;
அருமணி யாழக் கடலு ளிலங்கும் ;
துன்ப நினைவில் தூயநல் லறிவும்,
உள்ளத் துயரில் சாந்தமென் துறையும்,
வாழ்க்கைப் போரில் வெற்றியு முளதே.

## 77. உன்னத வுண்மை

ஆன்மா வதனின் அறிவரு மோனச்
சூன்யம், அமைதியி னெய்வும், சாந்த
வின்பமு, நிறைந்து விளங்கிடு மென்ப ;
எண்ணம் மொழியவைக் கில்லை ; அதுவோ.
உள்ளது மில்லை ; இல்லது மிலையே ;
முன்னிக் கடக்கும் மொழிநிழ லெனவதை ;

தன்னெதிர் தோன்றிதொலை தனிலொலிப் பதுபோல்
ஒளியதன் மேலே மிதந்தினி தேகும்;
நித்திய வசைவும், நித்திய சாந்தியும்,
ஒத்ததி யற்புத மாக வுயர்ந்த
உண்மை யதனில் கலந்தொளி ரும்மே.

## 78. என் வாழ்வொரு கீதம்

நித்திய வொலியை எதிரொலித் திடுமென்
உத்தம வாழ்வோ ருயரிய கீதம்;
தற்புல னுக்கித் திகழ்ந்திவ் வுலகில்
தோன்றும், தோன்றுப் பொருளெலாம் காணும்;
அன்னத னுள்ளம் அச்சந் தரும்,பே
ரமைதி சாந்தியொ டசைவில தாயினும்
அழியா விசைக்கு இயையத் துடிக்கும்;
அன்பில், களிப்பில், ஆடி, யதுவே
ஆழியி னலைபோ லங்கிங் கலையும்;
அகில வுயிரு மாபவன் யானே!
எல்லா வுயிரும் பொருளுமென் தோற்றம்;
எல்லாப் பொருளிலு மியைந்தனன் யானே!
அவற்றோ டொன்று யிலங்குவன் யானே!
ஆயினு மனைத்திலு முயர்ந்தோன் யானே!

## 79. என்றும் இன்பம்

மோனம், வாக்கில், முன்னிய தின்பம்;
செயலின் மையிலும், செயலிலு மின்பம்;
அசைவின் மையிலு, மசைவிலு, மின்பம்;
அமைதியி, லமளியி, லளப்பரு மின்பம்;
சாந்தியில், சமரில், சமைந்தது இன்பம்;

பாதுகாப், பாபத் ததனிலு மின்பம்;
இறப்பினில், வாழ்வி, லியம்பொரு ளின்பம்;
தாயவின், பிணைத்தெணி லியம்பவொண் ணாதே.

## 80. ஊற்று

அலையெழுந் தமிழும்; ஒளியிரு ளகற்றும்;
அமைதியும் புயலும், படைப்பும் அழிப்பும்,
பிறவியு மிறப்பும், இயற்கையி னுடல்;
இவ்விளை யாட்டில் சாட்சியா யிருநீ;
நித்திய வாழ்வில் நீயுறைந் திடுக;
இருமை நினைவு இன்றியுன் பணிசெய்;
சருவ வியாபக னயவொ ருண்மை
யூற்றி லிருந்துன் உன்னத வாழ்வு
தன்னை மறந்து தற்புலப் படுத்தித்
தடையில் வாழ்வில் தான்பெரு குமே.

## 81. தெய்விக அன்னை

அன்னையின் எல்லையில் மார்பில், அமைதி
சாந்தியொ டாழ்ந்த துயிலமர்ந் தவளின்
இனிமை, நேயம், வலிமை, யிவையே
கனவினி லென்றும் யான்கண் ணுறுவன்;
கண்விழித் தெழுதலும் கண்டனன்; என்னைச்
சுற்றி யொளிரும் சுடரொளி யதனை;
அனைத்துல காடலு மவளே ஆடுவள்;
அனைத்துநல் லுலகமு மவளே யாவள்;
இன்பென் னுள்ள வுணர்வை யெழுப்பும்;
அன்பு வெள்ள மென்னை நிறைக்கும்;
அளப்பரு முவகையி லுலக வன்னையை
அனைத்துல, கன்னை யெலாமா யினனே.

## 82. உன் இதய நேயன்

என்னுயி ரன்பனை நீகண் டனையோ?
உன்னுள வன்பனும் அவனே; அவனை
அறிவன்; உணர்வன்; காண்பன்; அவனே
அனைத்துநல் லின்ப முதல்வனென் றறிவன்;
என்னுயி ரவனொடு மியைத்துயான் பெற்ற
நித்திய வாழ்வு நீயும் பெறுதி;
வாழ்வெனும் நதியை அவனொடு கலந்தவன்
நித்திய வாழ்வில் ஒருமையின் புணர்தி;
சாந்திநீ வேண்டின் அவனில் தேடுதி;
அமுதென வினிய அன்புநீ வேட்பின்,
பரிசுத்த மாகிய பக்தியென் னூற்றை,யுன்
உள்ளத் துதிக்குமவ் வூற்றைநீ தொடலும்,
அளப்பரு மன்பால் அவனுனை நிறைப்பன்;
உன்னுளம், எண்ணம், அனைத்தையு மவனுக்
கொருங்கே யர்ப்பணம் செய்திடு வாய்நீ;
யான்காண் பதுபோல் நீயும், எனதும்
உனது மாயுய ரன்ப னொளியினை
எங்கும் இனிதாக் கண்ணுறு வாயே.

## 83. சமர்ப்பணம்

அளப்பருஞ் சாந்தி எனுமுனை யடைந்து
அமைதி பெறும்வரை, இறைவா, எந்தன்
எண்ணம் ஓடு மாறென வலைந்தது;
மேலும், கீழும், எங்கும், நீயே
நிறைந்து பரந்து நிற்பது கண்டனன்;
என்னை உன்னிற் பிரித்த விருமைத்
திரையைக் கிழித்தனை, இறைவா, இப்போ

சங்கம், சமயம், சாதி யனைத்தும்
எங்கும் மலிந்த கோவிலா லயமும்
மக்கள், விலங்கு, பொருளெலா மெனதே;
என்தெரி சனத்துக் கினிமுடி வில்லை;
என்னுளம் நிறைக்கு மன்புக் களவிலை;
எத்தகை காட்சி எனக்குநீ யளித்தனை!
எத்தகை அன்பால் எனைநீ நிறைத்தனை!
உன்னிணை யடிகளில் யான்பணிந் தனனே.

## 84. ஒன்றே உண்மை

அனைத்துயி ரொன்றே; அதனின் விலகின்
அகப்பட் டனைநீ யரும்பொறி யதனுள்;
அதனொடு மொன்றின் விடுதலை பெற்றனை;
"அனைத்துயி ருள்ளு மூயிர்யான்" எனமொழி.

* * * *

யானே நீயெனி லிரண்டா வேமோ?
இருமை என்பது எத்தகை பொய்மை?
உயரிய உண்மை என்பது ஒன்றே.

## 85. அன்னை வருகிருள்

அமைதி சாந்தியொ டமர்ந்துயா னிருப்ப
புலரிப் போதில் புகுவளென் அன்னை;
யான்மாத் திரஞ்செவி மடுத்திட, அன்னை
அன்பு மொழியே பேசிநின் றிடுவள்;
அவளெனை யறிவள்; அவளையா னறிவன்;
ஒருவரை யொருவ ருருகியாம் நோக்குவம்.
இருவரும் யாமே; ஒருவரும் யாமே;
காதல் தருமோர் களிவிருந் திதுவே;
அக்கணம் போதி லளப்பருங் களிப்பே.

## 86. மலர்போலிரு

கதிரவ னொளிக்குக் கடிமண மலர்கள்
புதுவித முலர்த்தி, புத்தழ கூட்டி,
நறுமண மெங்கும் பரப்புறு நலம்போல்,
இறைவ னொளியொடு முன்னுயிர் கலக்க,
அன்புந் தூய்மையு மணிந்துநீ சென்று
அனைத்துயிர் மேலு மாசி பொழிந்திடு;
பெரிய, சிறிய, பொருளெவை தனிலு
முரிய தெய்வ தெரிசனம் காண்நீ;
உள்ளத் துயரிய இன்ப முறுநீ;
அன்பொளி நின்கண் ணிணையில் மிளிர்க;
அனைத்தும் காக்கும் காட்சியே பொலிக;
இறையின் தோற்றமா யிங்கிருப் பாயே.

## 87. அன்பு ஒன்றே உண்மை

ஒளியா னகலின் அன்புயா னவன்;
களிதரு கடலலை கரையில் தாக்கி,
அன்பென் னுரையை ஆக்கிடும் கண்டாய்;
விண்ணைப் பிளக்கவென் றெண்ண முயர்ந்து,மென்
உள்ளத் தன்மை நயந்துபின் திரும்பும்;
எங்கும் எந்தன் அன்பையே காண்பன்;
அது,இது, அனைத்தும் ஆயதென் னன்பே.
அன்பே யுண்மையென் றறிந்தனம்; அதலால்
அன்பொன் றிலையேல் அனைத்தும் வீணே.

## 88. அகத்தே மூழ்கு

ஆழியைச் சேரு மகன்பே ராறவ்
வாழியே யாகு மியல்பது போல,
இறைவனை அடைதல் அவன்போ லாதல்;
நிறைவுறு தெய்வ சக்தியொ டியைந்த
ஆழ்ந்த, விழுமிய, ஐக்கிய நிலையில்;
சூழ்ந்து தேடுவோன், தேடப் படுவோன்,
என்றதொர் பேத மயக்கமு மில்லை;
உள்ளே மூழ்குக; உண்மையை அறிக;
அவனலால் வேறொன் றிலையா கலினால்,
ஆத்மா வதுவே பரமாத் மாவாம்;
உன்னுடை யுயிரே இறைவன் உயிராம்;
உந்த னுடலே அவனுரு வாகும்;
அவனும் நீயு மாகுவி ரொன்றே

## 89. உண்மைப் பாதை

உண்மைநீ வேண்டி னுறுதியா யதனை
அன்பெனு மாலய மதில்முதல் தேடு;
அன்பி னழகிய உருவ மமைந்து,
கட்புல னாகா வுண்மையங் குளதே;
உன்னரும் வாழ்வை யன்புக் களித்திடு;
அன்பே உந்தன் வாழ்வில் நிறைந்ததை
தூபம் போலச் சுடர்ந்திடச் செய்க;
ஏய நறுமணம் சேவையே யாக,
தரும்பரி அழியா வின்பமா கும்மே.

## 90. உன் மகிமை

தானென் னினைவு மடிந்த வுளத்தில்
சாந்தி அமைந்தது; தடையில் வேட்கை
அழலு முளத்தில், அமையுமோ சாந்தி?
உள்ளம் பளிங்கெனத் தூய்தா யிலங்கத்
தெள்ளெனத் தெய்வ வொளிதிக ழும்மே.
"மனமே, மாண்தகு மமைதியொ டிருநீ;
உனதுள் மகிமையை நீதெரித் திடுதி;
காணுப் பேசொணுக் கடவுளா மவனே,
எல்லையில் சாந்தி, இன்பமா மவனே,
தெரித்திடு" என்று தெரிவிப் பாயே.

## 91. உண்மை வழி

உள்ளத் துயரால் ஒளிமிக விழுந்து,
விளர்த்த முகமொடு, வியனுல கலுத்து,
தளர்ந்த நடையொடு தான்முன் செல்வள்;
அளப்பருந் துயரால் நலிந்துள மழிந்து
விடுதலை சாந்தியென் விழுமந் தருமோ
ருண்மை வழியை உயர்கரம் நீட்டி
எங்கும் தேடி ஏங்கியே நிற்பள்;
துன்ப நிலையி னேது வுணர்ந்தனள்;
உள்ளத் துள்ளே யுள்ளன தளைகள்;
உளந்தின் புழுவாம் துயருண் டுள்ளே;
உயிரைப் பிணிதளை யுடைப்பதெங் ஙனமோ?
அகமழி புண்ணை யழிப்பதெங் ஙனமோ?
துயர்நெருப் பவிதண் தடாகமெங் கேயோ?
ஆத்மவேதனை, அமளியை ஆற்றும்
சாந்தி என்னும் தனிமருந் தெங்கே?

எங்கே? உண்மை வழியெங் கேயோ?
எத்தனை குரவர் வந்தன ரேகினர்
அத்தனை குரவரும் தத்தம் வழியைச்
சுமத்திச் சென்றன ருலகில்; அவளோ
உழைப்பள்; துடிப்பள்; இன்னு மிருளாம்
மருளில், நோவில், மனம்கலங் கிடுவள்;
வேதனை கொண்டு விசன நடையொடு
விடுதலை சாந்தி, மேவச் செலுத்தும்
உண்மை வழியதற் காக வெறுவெளி
உற்று நோக்கிய வாறு,முன் செல்வள்
அலுத்த வுலகே! உன்னகந் தனிலே,
அன்பு மமைந்து, பின்னுந் தொனிக்கும்
இன்பக் குரலொன் றிசைப்பது கேள்நீ.
" அஞ்சேல் கேட்குதி, உள்ளே நோக்குன்
குறிக்கோள் யானே; குலவுல கனைத்தின்
இறைவனும் யானே; தலைவனும் யானே;
நித்தியம், சாந்தி, நிலவுயிர் யான்;உன்
அத்தனை உருவா யாகுநல் லுயிர்கள்,
பொருள்க ளனைத்திலும் பிறங்கிடு முயிர்யான்;
ஒன்றும் பூரணப் பொருள்நீ யாவை;
அனைத்துல காகத் தனைப்புல னுக்கும்
ஒருமா பலமும் சக்தியும் நீயே.
ஓடிடு மின்பம், வாடிடு புகழே,
நீடு நிலையா வலிமை தனக்காய்
பிரிந்து நின்று போரா டுவதேன்?
ராச்சியம் பகட்டு;சாம் ராச்சியம் தூசே;
போலி வேட்கை, வீண்விருப் பென்னும்
பற்றறுத் திடுக; பாரினில் இனிமேல்